தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த)
THANTHAI PERIYAR GOVERNMENT ARTS AND SCIENCE COLLEGE(A)
(Nationally Re-Accredited with 'A' Grade by NAAC in 3rd Cycle)
(Affiliated to Bharathidasan University,Tiruchirappalli - 24)
No.36/2, Race Course Road, Khajamalai, Tiruchirappalli - 620 023 Tamilnadu, India.
Ph : 0431 - 2420079 | E : periyarevrcollege@yahoo.com | W : www.thanthaiperiyargasc.ac.in
நாலினைப் பகுத்துணர்
Since 1965

தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி),

திருச்சிராப்பள்ளி-620 023

சுற்றறிக்கை

ந.க.எண்.1536/உ1/17 நாள் 08.08.2022

பொருள் : தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி),திருச்சி-23 – ஏப்ரல் 2022 தேர்வு – மறு மதிப்பீடு – தேர்வு முடிவு வெளியிடுதல் – குறித்து.

பார்வை: மாணவர்களது தேர்வு விடைத்தாள் மறுமதிப்பீடு கோரும் விண்ணப்பங்கள்

------------------

ஏப்ரல் 2022 தேர்வு விடைத்தாள் மறுமதிப்பீடு கோரிய மாணவர்களது விடைத்தாள் மறுமதிப்பீடு செய்யப்பட்டு, அவரவர் பெயருக்கெதிரே தேர்வு முடிவு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு தெரிவிக்குமாறு துறைத் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

10/8/22

தேர்வு நெறியாளர்.

பெறுதல்:

சார்ந்த துறைத்தலைவர்கள் மாணவர்களுக்கு அறிவிக்கும் பொருட்டு.

| | | |
|---|---|---|
| 1.Hist ........ | 7. Phy.. ........ | 13.Comp.Sc........ |
| 2. Eco........ 10/08 | 8.Chem........ | 14.Vis.Com........ |
| 3. Eng........ | 9. Bot........ | 15. BCA........ |
| 4.Tamil........ | 10.Zoo........ | 16.Bio-Chem........ |
| 5. Com........ | 11. Geog........ | |
| 6. Maths........ | 12.Stat........ | |

Signature Not Verified
Digitally Signed
Signed by: P S VIJAYALAKSHMI
Reason: NAAC
Location: TAMILNADU, INDIA
Date: 31-Jul-2023 12:33:21

தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி),திருச்சி-23.
தேர்வு நெறியாளர் அலுவலகம்

ந.க.எண்.2324/உ_1/17, நாள் 21.07.2022

பொருள்: தேர்வுகள் - ஏப்ரல் 2022 பருவத் தேர்வு – தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி), திருச்சி-23 - விடைத்தாள் மறுமதிப்பீடு (Re-Valuation) குறித்து.

-----------------

ஏப்ரல் 2022 தன்னாட்சி பருவத்தேர்வு எழுதிய இளநிலை மற்றும் முதுநிலை (UG & PG) மாணவர்கள், நடப்புப் பருவத்தில் (current semester) தங்களுடைய தேர்ச்சி பெறாத அல்லது தேர்ச்சி பெற்ற தாளுக்கு மறுமதிப்பீடு (Re-Valuation), மறுகூட்டல் (Re-totalling) மற்றும் விடைத்தாள் நகல் (Xerox copy) வேண்டுவோர், அதற்கான கட்டணத்தை **21.07.2022** முதல் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் கட்டணப் பற்றுச்சீட்டுப் (Chalan) பெற்றுக்கொண்டு அதன் மூலம் திருச்சி, K.K. நகரில் உள்ள கனரா வங்கியில் செலுத்தி உரிய விண்ணப்பத்தினைப் பெற்று விண்ணப்பிக்கலாம்.

**முதுநிலை மாணவர்களுக்கு மறுமதிப்பீடு:**

தேர்வு விடைத்தாள்களுக்கு மறுமதிப்பீடு கோரும் **முதுநிலை** மாணவர்கள் மறுமதிப்பீடு விண்ணப்பிக்கும் பாடத்தில் குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்ணில் 50 விழுக்காட்டிற்கு கீழ் மதிப்பெண் பெற்றிருந்தால் தாள் ஒன்றுக்கு **ரூ.400/-** வீதம் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் கட்டணப் பற்றுச்சீட்டுப் (Chalan) பெற்றுக் கொண்டு அதன் மூலம் திருச்சி, K.K. நகரில் உள்ள கனரா வங்கியில் செலுத்தி உரிய விண்ணப்பம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். விடைத்தாளின் நகல் மாணவர் சார்ந்த துறைத்தலைவர் மற்றும் பாடஆசிரியரால் மறு மதிப்பீட்டிற்கு தகுந்தது என பரிந்துரை செய்த பின்னரே மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க முடியும் **(கொள்குறிவகை (objective type) வினாத்தாட்கள் உடைய தாளிற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் விடைத்தாள் நகல் கோராமல் நேரடியாக மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கலாம்).** மறுமதிப்பீட்டிற்கு பரிந்துரை செய்த பின்னர் தாள் ஒன்றுக்கு **ரூ.600/-** வீதம் மேற்குறிப்பிட்டவாறு கட்டணப்பற்றுச்சீட்டு(Chalan) மூலம் செலுத்தி தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பம் பெற்று உரிய காலத்திற்குள் விண்ணப்பிக்கலாம். மறுமதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்கும் பாடத்தில் குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்ணில் 50 விழுக்காட்டிற்கும் மேல் மதிப்பெண் பெற்றிருந்தால், மாணவர்கள் விடைத்தாள் நகல் பெற வேண்டிய அவசியமில்லை. அவர்கள் நேரடியாக மறுமதிப்பீட்டிற்கான தொகை **ரூ.600/-** செலுத்தி விண்ணப்பிக்கலாம்.

**இளநிலை மாணவர்களுக்கு மறுமதிப்பீடு**

தேர்வு விடைத்தாள்களுக்கு மறுமதிப்பீடு கோரும் **இளநிலை** மாணவர்கள் தாள் ஒன்றுக்கு **ரூ.500/-** வீதம் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் கட்டணப் பற்றுச்சீட்டுப் (Chalan) பெற்றுக் கொண்டு அதன் மூலம் திருச்சி, K.K. நகரில் உள்ள கனரா வங்கியில் செலுத்தி உரிய விண்ணப்பம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

மறுமதிப்பீடு கோரி விண்ணப்பிக்க கடைசி தேதி **29.07.2022** ஆகும்.
(அரசு விடுமுறை மற்றும் ஞாயிறு தவிர மற்ற நாட்களில் தேர்வு நெறியாளர் அலுவலகம் இயங்கும்)

**கட்டண விவரம்**

1) மறுமதிப்பீடு (U.G. only) - ரூ. **500**/- தாள் ஒன்றுக்கு
2) மறு மதிப்பீடு
(P.G. only – if Below 50% of Passing Minimum Mark) - ரூ.**1000**/-தாள்ஒன்றுக்கு(**400**(நகல்)+**600**(மறுமதிப்பீடு))
3) மறு மதிப்பீடு
(P.G. only – if above 50% of Passing Minimum Mark) - ரூ. **600**/- தாள் ஒன்றுக்கு
4) மறுகூட்டல் (U.G. / P.G.) - ரூ. **250**/- தாள் ஒன்றுக்கு
5) விடைத்தாள் நகல்(ஜெராக்ஸ் காப்பி)(both U.G.& P.G) - ரூ. **400**/- தாள் ஒன்றுக்கு

21/7/22

தேர்வு நெறியாளர்.

21/7/2022

முதல்வர்.

பெறுதல் :
தகவல் பலகை மற்றும் அனைத்து துறைத் தலைவர்கள்.

Signature Not Verified
Digitally Signed
Signed by: P S VIJAYALAKSHMI
Reason: NAAC
Location: TAMILNADU, INDIA
Date: 31-Jul-2023 12:33:21